தேசிய வகை கணேசர் தமிழ்ப்பள்ளி, கெடா

கொன்றை வேந்தன்
ஆண்டு 2 வள்ளலார்
திகதி : 02.09.2021 (வியாழன்)

'சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்' எனும் கொன்றை வேந்தனின் பொருள் குறிக்கும் சூழலைச் சரியாகத் தெரிவுச் செய்க.

1. தாத்தாவின் நூறாவது பிறந்தநாளுக்கு மாமா, அத்தை, சித்தி ஆகியோர் குடும்பத்தினருடன் வீட்டிற்கு வந்து தாத்தாவின் பிறந்தநாளை எங்களுடன் விமரிசையாகக் கொண்டாடினர். ஒவ்வொரு திருவிழா, பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போதும் நாங்கள் ஒன்றிணைந்தே கொண்டாடுவோம்.

2. மாலாவுக்குக் கூட்டுக்குடும்பத்தில் வாழப்பிடிக்கவில்லை. சொந்தங்கள் துயரத்தை மட்டுமே வழங்கும் என்று நினைத்துக் குடும்பத்தில் அவ்வபோது சண்டைகளை வரச்செய்தாள். இதனால் குடும்பம் பிரிந்ததோடு குடும்பத்தினர் பலர் சந்தோஷத்தை இழந்தனர்.

3. ராஜாவின் தந்தை செய்த தவறினால் அவனது கூட்டுக்குடும்பமே பிரிந்தது. குடும்பத்தினர் அனைவருக்குக்கும் அவன்மீது மிகுந்த கோபம் இருந்தது. எனினும், ராஜா விபத்துக்குள்ளாகிய தகவல் கேட்டவுடனே அவனது குடும்பத்தினர் அனைவரும் அவனைத் தேடி வந்தனர். அவனது உடல்நலம் சரியாகும்வரை அனைவரும் பக்கத்தில் இருந்து அவனைக் கவனித்துக் கொண்டனர்.

4. ராதா தன் கணவரின் குடும்பத்தில் உள்ளவர்களை மிகவும் நேசித்தாள். அவர்களுள் சிலர் அவளது மனம் காயப்பட்டும்படி பேசிய போதிலும் அதனைப் பெரிதுப்படுத்தாமல் அனைவரின் மீதும் பாசம் செலுத்தி வாழ்ந்து வந்தாள்.

LIVEWORKSHEETS